23rd July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No extra allowance is paid solely for the purpose of Panchayat tax collection but panchayat development allowance is given in view of additional responsibilities developed on them on the introduction of the Madras Panchayats Acts, 1958;

(இ) The tax collection is treated as part of the extra duties devolved on the village officers for which Panchayat Development Allowance is being paid.

கந்திலி யூனியன் அலுவலகம் (இடம் மாற்றுதல்)

*560 கேள்வி.—திரு. எம். பி. வடிவேல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், கந்திலி யூனியன் அலுவலகத்தை ஆதியூருக்கு மாற்றவேண்டுமென்று யூனியனில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா ?

(இ) அரசாங்கம் இதைப்பற்றி என்ன முடிவு செய்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

Pond works

*560-A Q.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the steps taken to form ponds in Erode taluk, Coimbatore district;

(b) the number of pond works that have been investigated during 1960–61; and

(c) the number of ponds that have been sanctioned?

THE HON. SRI P. KAKKAN : (a) It has been programmed to investigate 26 cases of formation of ponds and seven other sources like kuttai, tank, etc., in Erode taluk of Coimbatore District.

(b) During 1960–61, 32 pond works have been investigated in Coimbatore District;

(c) During 1960–61, 24 pond works and during 1961–62, 21 pond works have been sanctioned for Coimbatore District.

National Integration Council for the State

MR. SPEAKER : Now we shall take up Sri M. Kalyanasundaram's question No. 522.

*522 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to set up a National Integration Council at the State level; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம் ராஜ்ய அளவில் இப்படி ஒரு இணைப்புத் கௌன்சிலை ஏற்படுத்த அரசாங்கம் மறுப்பதற்கு காரணம் என்ன? நம் ராஜ்யத்தில் தேசிய ஒற்றுமைக்கு விரோத மான சக்திகள் இல்லை என்பது அரசாங்கத்தின் கருத்தா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு ஒரே ஒரு காரணந் தான். கேள்வி, நாஷனல் இன்டக்ரேஷனைப் பொறுத்தது. அதை நாஷனல் லெவலில்தான் செய்யவேண்டும். ஒவ்வொரு மாநிலம், ஒவ்வொரு ஜில்லா, ஒவ்வொரு தாலுகா என்று செய்வதற்கு அவசியமில்லை. அகில இந்திய ரீதியில் இதற்கு கமிட்டிகள் இருக் கின்றன. அந்தக் கமிட்டி மூலம் இதைச் செய்யலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அஸ்திவாரம் பலமாகயிருந்தால் தான் மேல் கட்டிடம் பலமாக இருக்கமுடியும். தேசிய இணைப் பிற்கு அஸ்திவாரம் ராஜ்யங்கள். ராஜ்யங்களில் ஒற்றுமை உணர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்று அரசாங்கம் கருத வில்லையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதன் அவசியம்பற்றி மாறு பட்ட அபிப்பிராயம் இல்லை. அதற்காக மாகாண ரீதியில் கமிட்டி அமைக்கவேண்டிய அவசியமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : தேசிய ஒருமைப்பாடு உணர்ச்சி யை தமிழ் பேசும் மக்களிடமும், தமிழ்நாட்டிலும் ஏற்படுத்து வதற்கான நடவடிக்கைகள் எந்தத் துறைகளில் எடுக்க உத்தேசம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய கமிட்டிகள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவை பரிசிலனை செய்துகொண்டிருக்கின்றன. அதன் யோசனைப்படி நடவடிக்கை கள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. ர. நல்லசிவம் : குறிப்பாக இந்த தேசத்திலே நம் ராஜ்யத்தில் இந்த பிரிவினை மனோபாவம் அதிகம் இருப்பதாக உணரப்படுகிறது. அப்படி இருப்பதால் மீதியுள்ள ராஜ்யங்களில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நமது ராஜ்யத்திலாவது கீழ் மட்டத்திலிருந்து அதை ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப் படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு கூறியதுபோல், அகில இந்திய ரீதியில்தான் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். தனித்தனியாக எடுத்துக்கொள்வது சரியல்ல என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மத்திய கௌன்சில் கூறிய என் னென்ன யோசனைகள் ராஜ்ய சர்க்காரால் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன, இதுவரையில்.

23rd July 1962]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுதுதான் அது கூடியிருக்கிறது. குறிப்பிட்ட யோசனையின்பேரில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும் இப்பொழுது இந்த நாஷனல் இன்டக்ரேஷன் கௌன்சில் முடிவுகள் மேஜைமீது வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு மேல், தனியாக கேள்வி கேட்டால் விடை அளிக்கப்படும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாக கனம் சுகாதார அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவர விரும்புகிறேன். முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் காயல்பட்டணம் வாட்டர் சப்ளை ஸ்கீம் சம்பந்தமாக சொல்லும்போது 13 கிராமங்களுக்கும் முழு சப்ளை கொடுப்பதாக தகவல் தெரிவித்தார்கள். அங்கு இப்போது பைலட் சப்ளைதான் நடந்துகொண்டிருக்கிறதேதவிர முழு சப்ளையும் கொடுக்கப்படவில்லை. இதற்கான நீர்த்தேக்கத்தில் தண்ணீர் சுவரிப்போகக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. முழு அளவில் 13 கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைப்பதில்லை. கனம் அமைச்சர் அவர்களுக்கு கிடைத்திருக்கின்ற தகவல் சரியான தகவல் அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : May I know whether the hon. Member is putting a supplementary question or giving an explanation?

SRI M. S. SELVARAJAN : Sir, I wanted to bring this position to the notice of the Hon. Minister for Health through the Chair.

SRI M. KALYANASUNDARAM : Sir, I want to put a supplementary question.

MR. SPEAKER : Supplementary questions under this question are not yet over. I thought the hon. Member, Sri M. S. Selvarajan was going to put a supplementary question under this question. But, he is raising some other point.

The hon. Member, Sri M. Kalyanasundaram, may put his supplementary question.

திரு மீ. கலியாணசுந்தரம் : கனம் முதலமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்பு பூனாவில் கூடிய இதன் உபக் கமிட்டிக் கூட்டத்துக்குப் போய்வந்திருப்பதாக தெரிகிறது. ஆகவே அங்கு நடந்த விவரங்களையாவது தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. கு. காமராஜ் : அதில் இன்னும் முடிவு ஏற்படவில்லை. இன்னும் பல கூட்டங்கள் கூட்ட வேண்டியிருக்கின்றன. முடிவு எடுத்த பின்னால் இந்த விவரங்களை எல்லாம் கூறலாம்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.